## மாமன்றக் கூட்டம்

| | | |
|---|---|---|
| **கோப்பு எண்** | - | **ந.க.எண் 6201/2019/ எம்.சி. 8** |
| **நாள்** | - | **19.07.2019 காலை 11.00 மணி** |
| **தலைமை** | - | **திரு.ஜெ.ஷ்ரவன்குமார், இ.ஆ.ப.,<br>ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,<br>கோயம்புத்தூர் மாநகராட்சி** |
| **கலந்துகொண்டோர்** | - | **துணை ஆணையர்,<br>அனைத்து துறை தலைமைகள்,<br>அனைத்து மண்டல உதவி ஆணையர்கள்** |

---

**பொருள் எண் 1**

**பொருள்** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் – தனிஅலுவலராக பொறுப்பேற்றது – பதவிக்காலம் நீட்டிப்புக்கு தமிழ்நாடு சிறப்பு அரசிதழ் வெளியிடப்பட்டது – மன்றத்திற்கு சமர்ப்பித்தல் – தொடர்பாக.

**பார்வை**
1 தமிழ்நாடு நகராட்சிகள் சட்ட (3வது சட்ட திருத்தம்) அவசர சட்டம் 2016 (தமிழ்நாடு அவசரச்சட்டம் 2/2016) நாள்.17.10.2016
2 அரசாணை (எம்எஸ்) எண்.147 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்கள்) துறை, நாள்.24.10.2016.
3 மன்ற தீர்மான எண்.106 நாள்.11.11.2016
4 தமிழ்நாடு சிறப்பு அரசிதழ் எண்.297 நாள்.31.12.2016 அறிவிக்கை எண்.5 (அரசாணை(எம்எஸ்) எண்.187, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) , 31.12.2016)
5 மன்ற தீர்மான எண்.321 நாள்.25.01.2017
6 அரசாணை (எம்எஸ்) எண்.67 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை, நாள்.29.06.2017
7 மன்ற தீர்மான எண்.166 நாள்.19.07.2017
8 அரசாணை (எம்எஸ்) எண்.135, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை, நாள்.29.12.2017
9 மன்ற தீர்மான எண். 1 நாள்.29.01.2018
10 தமிழ்நாடு சிறப்பு அரசிதழ் எண்.236 நாள்.30.06.2018 அறிவிக்கை எண்.5
11 அரசாணை (எம்எஸ்) எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை, நாள்.31.12.2018
12 மன்ற தீர்மான எண். 180 நாள்.03.08.2018
13 தமிழ்நாடு சிறப்பு அரசிதழ் எண்.428 நாள்.31.12.2018 அறிவிக்கை எண்.5
14 அரசாணை (எம்எஸ்) எண்.83 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை, நாள்.28.06.2019
15 மன்ற தீர்மான எண். 1 நாள்.30.01.2019
16 தமிழ்நாடு சிறப்பு அரசிதழ் எண்.275 நாள்.28.06.2019 அறிவிக்கை எண்.5

----

1981ம் வருடத்திய கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தில் பிரிவு எண்.511–AAA பார்வை 1ல் காணும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்ட ( 3வது சட்ட திருத்தம்) அவசர சட்டம் 2016ன் (தமிழ்நாடு அவசரச்சட்டம் 2/2016) மூலமாக சேர்க்கப்பட்டு, கோயம்புத்தூர் மாநகராட்சி நிர்வாகத்தை கவனிக்க தனி அலுவலர் நியமிக்க வகை செய்யப்பட்டு அதனடிப்படையில் பார்வை 2ல் காணும் அரசாணையின் இணைப்பில் கண்டுள்ள அறிவிக்கை IIIன்படி கோயம்புத்தூர் மாநகராட்சியின் ஆணையாளர் அவர்கள் கோயம்புத்தூர் மாநகராட்சி தனிஅலுவலராக நியமிக்கப்பட்டதனைத் தொடர்ந்து டாக்டர்.க. விஜயகார்த்திகேயன்,இ.ஆ.ப., ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்கள் 25.10.2016 முற்பகல் கோயம்புத்தூர் மாநகராட்சியின் தனி அலுவலராக பொறுப்பேற்றுக் கொண்டதை பார்வை 3ல் காணும் மன்ற தீர்மானத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பார்வை 4ல் காணும் சிறப்பு அரசிதழின் அறிவிக்கை எண்.5ன்டி கோயம்புத்தூர் மாநகராட்சியில் தனி அலுவலர் அவர்களின் பதவி காலம் 31.12.2016 வரை என இருந்ததை 30.06.2017 வரை என திருத்தம் செய்து உத்திரவு வெளியிடப்பட்டுள்ளது.

பார்வை 6ல் காணும் அரசாணையில், கோயம்புத்தூர் மாநகராட்சியில் தனி அலுவலர் அவர்களின் பதவி காலம் 01.07.2017 முதல் ஆறு மாத காலம் அல்லது சாதாரண தேர்தல் நடத்தப்பெற்று முதல் மாமன்ற கூட்டம் நடைபெறும் நாள் வரை உள்ள காலம் இதில் எது முன்னதாக நடைபெறுகிறதோ அது வரைக்கும் என்று நீட்டிப்பு செய்து உத்திரவு வெளியிடப்பட்டுள்ளது.

பார்வை 8ல் காணும் அரசாணையில், கோயம்புத்தூர் மாநகராட்சி தனி அலுவலர் அவர்களின் பதவிக்காலம் 01.07.2017 முதல் ஆறுமாத காலம் நீட்டிப்பு செய்ததை 01.01.2018 முதல் 30.06.2018 வரை நீட்டிப்பு செய்து உத்திரவு வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது பார்வை 10ல் காணும் காணும் சிறப்பு அரசிதழின் அறிவிக்கை எண்.5ன்டி கோயம்புத்தூர் மாநகராட்சியில் தனி அலுவலர் அவர்களின் பதவி காலம் 01.07.2018 முதல் 31.12.2018 வரை நீட்டிப்பு செய்து உத்திரவு வெளியிடப்பட்டுள்ளது.

பார்வை 11ல் காணும் அரசாணையில், கோயம்புத்தூர் மாநகராட்சி தனி அலுவலர் அவர்களின் பதவிக்காலம் 01.07.2018 முதல் ஆறு மாத காலம் நீட்டிப்பு செய்ததை 01.01.2019 முதல் 30.06.2019 வரை ஆறுமாத காலம் நீட்டிப்பு செய்து உத்திரவு வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது பார்வை 13ல் காணும் காணும் சிறப்பு அரசிதழின் அறிவிக்கை எண்.5ன்டி கோயம்புத்தூர் மாநகராட்சியில் தனி அலுவலர் அவர்களின் பதவி காலம் 01.01.2019 முதல் 30.06.2019 வரை நீட்டிப்பு செய்து உத்திரவு வெளியிடப்பட்டுள்ளது.

எனவே கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தனி அலுவலராக 01.01.2019 முதல் 30.06.2019 வரை நீட்டிப்பு செய்து வெளியிடப்பட்ட பார்வை 13ல் காணும் சிறப்பு அரசிதழை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

பார்வை 14ல் காணும் அரசாணையில், கோயம்புத்தூர் மாநகராட்சி தனி அலுவலர் அவர்களின் பதவிக்காலம் 01.01.2019 முதல் ஆறு மாத காலம் நீட்டிப்பு செய்ததை 01.07.2019 முதல் 31.12.2019 வரை ஆறுமாத காலம் நீட்டிப்பு செய்து உத்திரவு வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது பார்வை 16ல் காணும் காணும் சிறப்பு அரசிதழின் அறிவிக்கை எண்.5ன்டி கோயம்புத்தூர் மாநகராட்சியில் தனி அலுவலர் அவர்களின் பதவி காலம் 01.07.2019 முதல் 31.12.2019 வரை நீட்டிப்பு செய்து உத்திரவு வெளியிடப்பட்டுள்ளது.

எனவே கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தனி அலுவலராக 01.07.2019 முதல் 31.12.2019 வரை நீட்டிப்பு செய்து வெளியிடப்பட்ட பார்வை 13ல் காணும் சிறப்பு அரசிதழை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம். (ந.க.எண்.9129/2016/எம்சி2)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 116 நாள் 19.07.2019**

பதிவு செய்யபட்டது.

---

**பொருள் எண் 2**

பொருள்: பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி திருமதி.ஆர்.மோகனசுந்தரி, உதவி ஆணையாளர் (நிர்வாகம்), பொதுப் பிரிவு – வீடு கட்டும் முன்பணம் கோரியுள்ளது – மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பித்தல் தொடர்பாக.

---------

கோயம்புத்தூர் மாநகராட்சி, பிரதான அலுவலகம் பொதுப் பிரிவில் பணிபுரியும் திருமதி.ஆர்.மோகனசுந்தரி, உதவி ஆணையாளர் (நிர்வாகம்) அவர்கள் கோயம்புத்தூர் தாலூக்கா, பேரூர் செட்டிபாளையம் கிராமம் க.ச.எண்.26/2ஏ நெ. காலையில் சைட் எண்.82ல் உள்ள 2232 சதுரடி கொண்ட (5 செண்ட் 053 சதுரடி) காலிமனையிடத்தில் அவரது பெயரில் வீடு கட்டிக் கொள்வதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.31.75 இலட்சத்தில் ரூ.10.00 இலட்சத்திற்கு அலுவலகம் மூலம் வழங்கப்படும் முன்பணம் வாயிலாக வீடு கட்டி கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கீழ்க்கண்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது:

1. வீடு கட்டும் முன்பணம் பெற குறைந்தபட்சம் 6 ஆண்டுகள் பணியாற்றி இருக்க வேண்டும். திருமதி.ஆர்.மோகனசுந்தரி அவர்கள் பணியில் சேர்ந்து சுமார் 25 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து வருகிறார்.
2. இவருக்கு எஞ்சிய பணிக் காலம் இன்னும் 8 ஆண்டுகள் உள்ளது. இவர் முன்பணத் தொகை மற்றும் வட்டியை 8 ஆண்டுகளுக்கு பிடித்தம் செய்து கொள்ளவும் மீதமுள்ள கடன் பாக்கியை இவரது கிராஜீவிட்டியில் பிடித்தம் கொள்ளலாம்.
3. இவர் மீது 8(2) உள்ளிட்ட எவ்விதமான குற்றச்சாட்டுகளும் இல்லை.
4. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
5. மேற்படி இடத்தில் கட்டிடம் கட்டிக் கொள்ள பேரூர் செட்டிபாளையம் ஊராட்சி தனி அலுவலர் அவர்களால் வழங்கப்பட்ட கட்டிட அனுமதி நகல் மற்றும் வரைபடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
6. கட்டுமானத்திற்கான மதிப்பீடு பட்டியல் அங்கீகரிக்கப்பட்ட பொறியாளர் சான்றுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
7. மனுதாரருக்கு பாத்தியப்பட்ட இடத்தின் பத்திரம் எண்.2328/2019ன் நகல் இணைக்கப்பட்டுள்ளது.
8. விதிமுறைகளில் தெரிவித்துள்ளவாறு 6 மாத கால அவகாசத்தினை கடக்காத வில்லங்க சான்று நகல் இணைக்கப்பட்டுள்ளது.
9. வீடு கட்ட துறை தலைமை வழங்கிய முன் அனுமதி உத்திரவு இணைக்கப்பட்டுள்ளது.
10. அசல் கிரைய பத்திரத்தினை ஆணையரது பெயருக்கு அடமானம் செய்து தர வேண்டும்.
11. மனுதாரர் செலுத்த வேண்டிய வீடு கட்டும் முன்பண நிலுவை அவரது பணிக்காலத்தில் பிடித்தம் செய்யாமல் மீதம் இருக்கும் பட்சத்தில் மாநகராட்சியிலிருந்து அவருக்கு வழங்கப்படும் பணப்பலன்களிலிருந்து ஈடு செய்யப்படும்.
12. இடத்தின் கிரய பத்திரம் மற்றும் அடமான பத்திரம் உண்மை பிரதிகளை கிரயம் செய்த 3 மாதத்திற்குள் மாநகராட்சி கருவூலத்தில் ஒப்படைக்க வேண்டும்
13. இவரது ஊதிய விபரம் கீழ்க்கண்டவாறு:

அடிப்படை ஊதியம்: ரூ.68000<br>
அகவிலைப்படி 12% ரூ.8160

76160 x 75 times = 57,12,000/–

இவருக்கு பணிக்காலம் 8 ஆண்டுகள் மட்டும் இருப்பதால் ரூ.10.00 இலட்சம் வழங்க தகுதி உள்ளது. எனவே இவர் கோரிய ரூ.10.00 இலட்சம் வழங்கலாம்.

$$\frac{ரூ.25,00,000}{20} \times 8 = ரூ.10,00,000$$

| | |
|---|---|
| பணியில் சேர்ந்த நாள் | :27.11.1987 |
| ஓய்வு பெறும் நாள் | :30.06.2027 |

எனவே அரசாணையில் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு மனுதாரருக்கு 8 வருடங்கள் மட்டுமே பணிக்காலம் உள்ளதால் இவருக்கு ரூ.10.00 இலட்சம் வீடு கட்டும் முன்பணம் பெற மனுதாரருக்கு அனுமதிக்கலாம்.

**முன்பணம் விடுவித்தல்**

தமிழ்நாடு அரசு விதிகளில் XIII வீடுகட்டும் முன்பணம் மற்றும் முன்பணம் விடுவித்தல் என்ற தலைப்பில் (G.O.Ms.No.688 Housing, dt.01/10/1992) இரண்டு தவணைகளாக முன்பணம் அனுமதிக்க வழிவகை உள்ளது.

சொத்தினை அடமானம் செய்துவர விண்ணப்பத்துடன் படிவம் 5ல் மனுதாரர் ஏற்கனவே வழங்கியுள்ள உறுதிமொழியின் அடிப்படையில் கூரை மட்டம் வரையிலான கட்டுமான பணியினை முடித்திட 50% முன்பணத் தொகையும் மேற்படி முதல் தவணையை செலவு செய்ததற்கான (Utilisation Certificate, பொறியாளர் சான்று, பதிவு செய்த அடமான பத்திரம் ஆகியவை பெறப்பட்ட பின்பு இதர பணிகளை முடித்திட எஞ்சிய 50% தொகையும் விடுவிக்க வழி வகை உள்ளது.

**வட்டி விகிதம்**

அரசாணை எண்.43 நாள்.31.01.2019(Finance(Loans & Advances cell) Dept)ன்படி கீழ்க்கண்டவாறு வட்டி நிர்ணயம் செய்யலாம்.

| | | |
|---|---|---|
| (i) | ரூ.50,000 வரை | : 5.00% |
| (ii) | ரூ.50,001– 1,50,000 வரை | : 6.50% |
| (iii) | ரூ.1,50,001– 5,00,000 வரை | : 8.50% |
| (iv) | above ரூ.5,00,000 | : 9.50% |
| (v) | தவணை மீறிய தொகைக்கு அபராதம் | 2.5% |

**பிடித்தம்**

விதிமுறைகளின்படி அசல் தொகை 8 வருட சம தவணைகளாகவும் அதன்பின்பு வட்டி தொகை கணக்கிட்டு 3 வருட சமதவணைகளாகவும் பிடித்தம் செய்யப்பட வேண்டும். இருப்பினும் 20 ஆண்டுகளுக்கு குறைவாக எஞ்சிய பணிக்காலம் உள்ளவர்களுக்கு அவர்களது பணிக்கொடையிலும் பிடித்தம் செய்து கொள்ள உறுதி மொழி பெற்றுக் கொண்டு அவர்களுக்கு வசதியான மாதாந்திர தவணைகளாக பிடித்தம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அசல் தொகையினை 8 வருடங்களில் 95 மாத சமதவணைகளில் ரூ.10417/– வீதமும் 96வது தவணை தொகையாக ரூ.10385/– பிடித்தம் செய்திடலாம். அதன்பின்பு வட்டித் தொகை கணக்கிட்டு அதனை விதிமுறைகளின்படி 36 தவணைகளாக பிரித்து, பணிக்காலத்தில் பிடித்தம் செய்ய அனுமதிக்கலாம்.

மேலும் முன்பணம் பெற்று கிரயம் செய்த அடுத்த மாதத்திலிருந்து முன்பணத் தொகை பிடித்தம் செய்யப்பட வேண்டும்.

எனவே மேற்படி விதிமுறைகளின்படியும், இதர வீடு கட்டும் முன்பணம் விதிமுறைகளின்படியும் மனுதாரருக்கு வீடு கட்டும் முன்பண தொகை ரூ.10,00,000/–ம் இரண்டு தவணைகளாக அனுமதிக்க, மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>அனுமதிக்கலாம். (ந.க.எண்.5120 /2019/எம்.சி.2)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 117 நாள் 19.07.2019</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 3**

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் -5 & 9 க்குட்பட்ட மேட்டுபாளையம் சாலையில் நெடுஞ்சாலைத்துறை மூலம் சாலையை அகலப்படுத்தி புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இச்சாலையின் இருபுறமும் அகலப்படுத்தும் போது ஏற்கனவே உள்ள பிரதான குழாய்கள் அனைத்தும் சேதப்படுத்தப்பட்டு குடிநீர் விநியோகம் தடைப்பட்ட நிலையில் உள்ளது. எனவே, இச்சாலையின் பக்கவாட்டில் புதிதாக பிரதான குழய் அமைக்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:

| வ.எண் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 5 & 9 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் மேட்டுபாளையம் பிரதான சாலைப் பகுதிகளில் குடிநீர் குழய் பதிக்கும் பணி<br>(ந.க.எண்.5761/2019/எம்.டி.2) | 14.00 |

மேற்கண்ட பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :அனுமதிக்கலாம் ந.க.எண். ந.க.எண்.5761/2019/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 118 நாள் 19.07.2019</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 4**

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் -16,18 & 19க்குட்பட்ட சிறுவாணி திட்ட சாலையில் TURIP திட்டத்தின் கீழ் ரூ.270.00 இலட்ச மதிப்பீட்டில் 3 கி.மீ நீளத்தில் தார் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இச்சாலையில் பிரதான குடிநீர் குழாய் சாலையின் நடுவே அமைத்து உள்ளது. இப்பிரதான குழாயானது பல வருடங்களுக்கு முன்பு அமைக்கப்ட்டு பழுதடைந்த நிலையில் தற்போது பயன்பாட்டில் உள்ளது. தற்சமயம் சாரைல அமைக்கும் போது குழாயிலும் பழுதடைந்து உள்ளது. இப்பிரதான குழாய் உடன் சாலை அமைத்தால் எதிர்வரும் காலங்களில் குடிநீர் பிரதான குழாயில் குடிநீர் விநியோகம் செய்யும் போது குடிநீர் கசிவு ஏற்பட்டு சாலை பழுதடையும் என்பதால் இப்பிரதான குழாயை இச்சாலையின் பக்கவாட்டில் புதிதாக பிரதான குழய் அமைக்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:

| வ.எண் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 16,18 & 19 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்கள் 16,18 மற்றும் 19 க்குட்பட்ட சிறுவாணி திட்ட சாலை மற்றும் இணைப்பு சாலைகளில் குடிநீர் குழய் பதிக்கும் பணி<br>(ந.க.எண்.5762/2019/எம்.டி.2) | 27.00 |

மேற்கண்ட பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :அனுமதிக்கலாம் ந.க.எண். ந.க.எண்.5762/2019/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 119 நாள் 19.07.2019</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 5**

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் -16,17,18 & 19 க்குட்பட்ட தொண்டாமுத்தூர் சாலை மற்றும் மருதமலை பிரதான சாலையில் நெடுஞ்சாலைத்துறை மூலம் சாலையை அகலப்படுத்தி புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இச்சாலையின் இருபுறமும் அகலப்படுத்தும் போது ஏற்கனவே உள்ள பிரதான குழாய்கள் அனைத்தும் சேதப்படுத்தப்பட்டு குடிநீர் விநியோகம் தடைப்பட்ட நிலையில் உள்ளது. எனவே, இச்சாலையின் பக்கவாட்டில் புதிதாக பிரதான குழய் அமைக்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:

| வ.எண் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 16,17,18 & 19 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் மருதமலை பிரதான சாலை மற்றும் தொண்டாமுத்தூர் சாலைப் பகுதிகளில் குடிநீர் குழய் பதிக்கும் பணி **(ந.க.எண்.5763/2019/எம்.டி.2)** | **18.00** |

மேற்கண்ட பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :அனுமதிக்கலாம் ந.க.எண். ந.க.எண்.**5763/2019**/எம்.டி.**2**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 120 நாள் 19.07.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 6**

கோவை மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண் 81 வெரைட்டி ஹால் சாலையில் உள்ள மாநகராட்சி சிட்டி மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டுதல் மற்றும் அபிவிருத்தி பணிகள் செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.49,00,000- ற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :அனுமதிக்கலாம் ந.க.எண்.**2565/2019**/எம்.டி.**5**(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 121 நாள் 19.07.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 7**

கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரம் – கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான வெள்ளலூரில் உள்ள இடத்தில் மாநகராட்சி பகுதிகளிலிருந்து கொண்டு வரப்படுகின்ற திடக்கழிவுகளை திறந்த வெளியில் உள்ள பகுதிகளில் குவியல்களாக கொட்டி நிரவுவதற்கு D8K Dozer 72 நாட்கள் தினமும் 8 மணி நேரம் அடிப்படையில் வாடகைக்கு அமர்த்துதல் இதற்கான உத்தேச செலவினம் ரூ.**30,00,000/–** ஆகும்.

எனவே மேற்படி பணிக்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.**30,00,000/–**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:– அனுமதிக்கலாம் ந.க.எண். 5925/ 2019/JN5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 122 நாள் 19.07.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 8

கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரம் – கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான வெள்ளலூரில் உள்ள இடத்தில் மாநகராட்சி பகுதிகளிலிருந்து கொண்டு வரப்படுகின்ற திடக்கழிவுகளை திறந்த வெளியில் உள்ள பகுதிகளில் குவியல்களாக கொட்டி நிரவுவதற்கு Excavators 69 நாட்களுக்கு தினமும் 8 மணி நேரம் வாடகைக்கு அமர்த்துதல் இதற்கான உத்தேச செலவினம் ரூ.50,00,000/– ஆகும்.

எனவே மேற்படி பணிக்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.50,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:– அனுமதிக்கலாம் ந.க.எண். 5924/ 2019/JN5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 123 நாள் 19.07.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 9

கோவை மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண் 64 க்குட்பட்ட வரதராஜபுரம் கோயம்புத்தூர் மாநகராட்சி கல்யாண மண்டபத்தற்கு மராமத்து பணிகள் செய்வதற்கு மதிப்பீடு ரூ.13,00,000/- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:அனுமதிக்கலாம் ந.க.எண்.5429/2019/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 124 நாள் 19.07.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரபட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 71-க்குட்பட்ட ஜீ.டி வீதியில் குடியிருப்பு பகுதிகளில் உள்ள பழுதடைந்த சாலைகளுக்கு மறுதார்தளம் அமைத்தல்.<br><br>ந.க.எண். 5802/2017/எம்.டி.5 | 54.00 | முன் அனுமதி 28.06.17 | 31.07.17 முதலாம் அழைப்பு | 1). தி/ள். அழகு கன்ஸ்ட்ரக்சன்ஸ் 0.59% அதிகம்<br><br>2). தி/ள். கே.எஸ்.ஆர் அன் கோ 0.16% குறைவு | தி/ள். கே.எஸ்.ஆர் அன் கோ 0.16% குறைவு |
| 2 | வார்டு எண் 71-க்குட்பட்ட டீ எஸ்டேட் காம்பவுண்ட் குடியிருப்பு பகுதிகளில் உள்ள பழுதடைந்த சாலைகளுக்கு மறுதார்தளம் அமைத்தல்.<br><br>ந.க.எண். 5801/2017/எம்.டி.5 | 51.00 | முன் அனுமதி 28.06.17 | 31.07.17 முதலாம் அழைப்பு | 1). தி/ள். அழகு கன்ஸ்ட்ரக்சன்ஸ் 0.16% அதிகம்<br><br>2). தி/ள். கே.எஸ்.ஆர் அன் கோ 0.24% குறைவு | தி/ள். கே.எஸ்.ஆர் அன் கோ 0.24% குறைவு |
| 3 | வார்டு எண் 73-க்குட்பட்ட கிழக்கு கிளப் சாலைக்கு மறுதார்தளம் அமைத்தல்.<br><br>ந.க.எண். 5799/2017/எம்.டி.5 | 38.40 | முன் அனுமதி 28.06.17 | 31.07.17 முதலாம் அழைப்பு | 1). தி/ள். அழகு கன்ஸ்ட்ரக்சன்ஸ் 0.14% அதிகம்<br>2). தி/ள். கே.எஸ்.ஆர் அன் கோ 0.09% குறைவு | தி/ள். கே.எஸ்.ஆர் அன் கோ 0.09% குறைவு |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளின் ஒப்பந்த புள்ளிகளை ஏற்கவும் மற்றும் அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்பட்ட பணிகளின் நிர்வாக அனுமதிக்கு முன்அனுமதி பெறப்பட்டதற்கு பின்னேற்பு வேண்டியும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம். ந.க.எண். 5802/2017/எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 125 நாள் 19.07.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 11

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.82 ஈஸ்வரன் கோவில் வீதிலுள்ள நடை பாதை கடைகள் (68 கடைகள்) - ஒதுக்கீடு செய்யப்பட்டு - மூன்று ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்து – உரிமம் புதுப்பித்தல் - தொடர்பாக

பார்வை :
1. அரசாணை எண். 147 ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள். 30.12.2000.
2. அரசாணை எண். 92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007.
3. மாமன்ற தீர்மான எண்.264 நாள். 20.11.2017
4. இவ்வலுவலக கடித எண். 741/2019/அ7 (ம) நாள்.25.02.2019.

*********

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்ட வணிக வளாக கடைகளுக்கு பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணைகளின்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீட்டித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.164 நாள் 28.10.2004-ன் படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92–நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.07–ன் படி உரிமம் புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யவும் 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசாணையின் படி பொதுப்பணித்துறை வாடகை மதீப்பிடுகளின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின் படி கீழ் குறிப்பிட்ட கடைகளுக்கு 31.03.2016-யுடன் மூன்றாண்டுகள் முடிவடைந்தததால் 01.04.2016 முதல் 31.03.2019 வரை 15 சதவீதம் வாடகை உயர்வு செய்யப்பட வேண்டும் .

**(அ) இடம்.ஈஸ்வரன் கோவில் வீதி PWD சுவர் ஓரம் நடைபாதை கடைகள். (20 கடைகள்)**

| வ. எண் | வரி விதிப்பு எண் | கடை எண் | பெயர் | கடையின் அளவு | மொத்த ச.அடி | பொதுப்பணித்துறை வாடகை மதிப்பீட்டின் படி உயர்வு செய்யப்பட்டு தற்போது செலுத்தி வரும் மாத வாடகை ரூ. | உரிமம் புதிப்பிக்கப்பட வேண்டி நாள். | | 01.04.2016 முதல் 15 சதவீதம் உயர்வு செய்யப்பட வேண்டிய மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | முதல் | முடிய | |
| 1 | 8231556 | 1 | வி.எ.அக்பர் உசேன் | 4x3.25 | 13 | 1380 | 01.04.2019 | 31.03.2022 | 1587 |
| 2 | 8231557 | 2 | அப்துல் ஹமீத் | 4x3.25 | 13 | 1380 | 01.04.2019 | 31.03.2022 | 1587 |
| 3 | 8231558 | 3 | யூசுப் | 4x3.25 | 13 | 1380 | 01.04.2019 | 31.03.2022 | 1587 |
| 4 | 8231559 | 4 | டி.எம்.எச்.கபீர் | 4x3.25 | 13 | 1380 | 01.04.2019 | 31.03.2022 | 1587 |
| 5 | 8231560 | 5 | வி.எம்.முகம்மது பாஷா | 4x3.25 | 13 | 1380 | 01.04.2019 | 31.03.2022 | 1587 |
| 6 | 8231561 | 6 | சி.பி.அப்துல் ரகுமான் | 4x3.25 | 13 | 1380 | 01.04.2019 | 31.03.2022 | 1587 |
| 7 | 8231562 | 7 | வி.இப்ராஹீம் | 4x3.25 | 13 | 1380 | 01.04.2019 | 31.03.2022 | 1587 |
| 8 | 8231563 | 8 | வி.எம்.சேக் முஜீபுர் | 4x3.25 | 13 | 1380 | 01.04.2019 | 31.03.2022 | 1587 |
| 9 | 8231564 | 9 | வி.ஐ.கலீல் ரகுமான் | 4x3.25 | 13 | 1380 | 01.04.2019 | 31.03.2022 | 1587 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | 8231565 | 10 | வி.ஐ.பத்துருதீன் | 4x3.25 | 13 | 1380 | 01.04.2019 | 31.03.2022 | 1587 |
| 11 | 8231566 | 11 | சி.எம்.எஸ்.அப்துல் வாகித் | 4x3.25 | 13 | 1380 | 01.04.2019 | 31.03.2022 | 1587 |
| 12 | 8231567 | 12 | அப்துல் ஜாபார் | 4x3.25 | 13 | 1380 | 01.04.2019 | 31.03.2022 | 1587 |
| 13 | 8231568 | 13 | வரதராஜன் | 4x3.25 | 13 | 1380 | 01.04.2019 | 31.03.2022 | 1587 |
| 14 | 8231569 | 14 | மெலுதீன் | 4x3.25 | 13 | 1380 | 01.04.2019 | 31.03.2022 | 1587 |
| 15 | 8231570 | 15 | அப்துல் ஹக்கீம் | 4x3.25 | 13 | 1380 | 01.04.2019 | 31.03.2022 | 1587 |
| 16 | 8231571 | 16 | மணிகண்டன் | 4x3.25 | 13 | 1380 | 01.04.2019 | 31.03.2022 | 1587 |
| 17 | 8231572 | 17 | கே.எ.ஹக்கீம் | 4x3.25 | 13 | 1380 | 01.04.2019 | 31.03.2022 | 1587 |
| 18 | 8231573 | 18 | மணிகண்டன் | 4x3.25 | 13 | 1380 | 01.04.2019 | 31.03.2022 | 1587 |
| 19 | 8231574 | 19 | எ.கே.ராஜன் | 4x3.25 | 13 | 1380 | 01.04.2019 | 31.03.2022 | 1587 |
| 20 | 8231575 | 20 | அப்துல் கரீம் | 4x3.25 | 13 | 1380 | 01.04.2019 | 31.03.2022 | 1587 |

**(ஆ) இடம்.ஈஸ்வரன் கோவில் வீதி PWD சுவர் எதிர்புரம் நடைபாதை கடைகள் (48 கடைகள்)**

| வ. எண் | வரி விதிப்பு எண் | கடை எண் | பெயர் | கடையின் அளவு | மொத்த ச.அடி | பொதுப்பணித் துறை வாடகை மதிப்பீட்டின் படி உயர்வு செய்யப்பட்டு தற்போது செலுத்தி வரும் மாத வாடகை ரூ. | உரிமம் புதிப்பிக்கப்பட வேண்டி நாள். | | 01.04.2016 முதல் 15 சதவீதம் உயர்வு செய்யப்பட வேண்டிய மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | முதல் | முடிய | |
| 1 | 8231589 | 1 | என்.ஜெ.ஷாஜ்கான் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 2 | 8231590 | 2 | என்.ஜெ.ஹைதர் அலி | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 3 | 8231591 | 3 | லதீப் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 4 | 8231592 | 4 | எஸ்.எம்.இஸ்மாயில் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 5 | 8231593 | 5 | பி.எம்.ரஹமாத் துல்லா | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 6 | 8231594 | 6 | டி.எம்.சுக்குர் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 7 | 8231595 | 7 | சையத் இப்ஹகீம் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 8 | 8231596 | 8 | பி.எம்.காஜா மெய்தீன் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 9 | 8231601 | 9 | எம்.எ.அபுபாக்கர் சித்திக் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 10 | 8231598 | 10 | எம்.எ.உமர்பரூக் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 11 | 8231599 | 11 | முகமது சலீம் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 12 | 8231600 | 12 | ஹமனுல்லா | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 13 | 8231597 | 13 | டி.கே.எம்.நூருல்லா | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 14 | 8231719 | 14 | பி.எம்.அபுதாகீர் அலி | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 15 | 8231720 | 15 | டி.கே.முகம்மது ரபீக் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 16 | 8231721 | 16 | டி.கே.அபுதாகீர் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 17 | 8231722 | 17 | என்.முகம்மது ரபீக் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 18 | 8231725 | 18 | என்.கே.ஹைதர் அலி | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 19 | 8231726 | 19 | பக்ருதின் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 20 | 8231727 | 20 | அப்பாஸ் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 21 | 8231728 | 21 | ஹபீப்ரகுமான் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 22 | 8231730 | 22 | மஜீத் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 23 | 8231731 | 23 | முகம்மது ரபீக் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 24 | 8231612 | 24 | எஸ்.எ.அப்துல் ஜலீல் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 25 | 8231613 | 25 | மெகபூப் கான் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 26 | 8231614 | 26 | ராஜா முகம்மது &இப்ராகீம் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 27 | 8231615 | 27 | சையத் முகம்மது & முகம்மது அனீபா | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 28 | 8231616 | 28 | பஷீா | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 29 | 8231617 | 29 | அஸ்ரப்அலி | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 30 | 8231618 | 30 | சையத் இக்பால் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 31 | 8231619 | 31 | ஆரோன்பாஷீா | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 32 | 8231620 | 32 | அம்சா& காஜாஉசேன் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 33 | 8231621 | 33 | எஸ்.எம்.சாதிக் பாஷா | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 34 | 8231602 | 34 | சி.வி.எ.ஜலீல் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 35 | 8231603 | 35 | வி.எ.ரஹமத் துல்லா | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 36 | 8231604 | 36 | எ.சகாபுதீன் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 37 | 8231605 | 37 | லையகுத் அலி | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 38 | 8231606 | 38 | மரகதம்மாள் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 39 | 8231607 | 39 | பாா்வதி | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 40 | 8231608 | 40 | ஜெயா | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 41 | 8231609 | 41 | சரசும்மாள் & கமலா | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 42 | 8231610 | 42 | எஸ்.எ.ரஜாக் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 43 | 8231611 | 43 | நல்லசாமி | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 44 | 8231714 | 44 | காஜா | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 45 | 8231715 | 45 | அய்யம்மாள் &ராஜேஸ்வரி | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 46 | 8231716 | 46 | ரகுமான் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 47 | 8231717 | 47 | சிக்கந்தா் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |
| 48 | 8231718 | 48 | என்.ஜெ.அப்துல் காதா் | 5x6 | 30 | 863 | 01.04.2019 | 31.03.2022 | 993 |

அரசாணை(நிலை எண்.92) நாள்.3.07.2007 பத்தி எண்.IV-ன்படி உரிமம் ஒதுக்கீடு பெற்ற குத்தகைதாரா்கள் ஒவ்வொரு 3 ஆண்டு முடிவுற்ற பின்னா் உரிமம் புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி உரிமம் புதுப்பித்துக் கொள்ள பாா்வை 4-ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின் மூலம் மேற்குறிப்பிட்ட கடைகளுக்கு நிலுவைத் தொகை மற்றும் புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி சம்மதக் கடிதம் வழங்க தெரிவிக்கப்பட்டதில், பணிரெண்டு கடை உரிமதாரா்களிமிருந்து மட்டுமே சம்மதக் கடிதம் பெறப்பட்டுள்ளது. மற்ற கடை உரிமதாரா்களிடமிருந்து நாளது தேதிவரை விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை.

மேற்படி உரிமதாரா்கள் செலுத்தியுள்ள முன் வைப்பு வாடகை தொகையினை உயா்வு செய்யப்படும் வாடகையின் 1 வருட வாடகைத் தொகையினை / வித்தியாச வாடகையினை வசூல் செய்யவும், இத்துடன் புதுப்பித்தல் கட்டணம், வைப்பு தொகை வித்தியாச தொகை, சேவை வரி, மின் கட்டணம் மற்றும் அவ்வப்பொழுது மத்திய மாநில அரசால் நிா்ணயம் செய்யப்படும் இதர வரிகளை செலுத்துவதற்கு ஒப்புக்கொள்ளும் உரிமதாரா்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் உரிமம் புதுப்பித்து ஒப்படைக்கவும், உரிமம் புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி உரிமம் புதுப்பிக்காத நோ்விலும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரா்களின் கடைகளின் உரிமத்தை ரத்து செய்து மறு ஏலத்திற்கு கொண்டு வரவும் அவா்களின் வைப்புத் தொகைகளை பறிமுதல் செய்து உரிமம் ரத்துசெய்து, கறுப்புபட்டியலில் சோ்த்து இவ்வினங்களுக்கு மறு ஏலத்திற்கு கொண்டுவரவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - மூன்றாண்டுகள் முடிவடைந்ததால் அரசாணைபடி 15சதவீதம் வாடகை உயா்வு செய்ய அனுமதிக்கலாம்.

ந.க. எண். 741 /2019 /அ7 (ம)

**மாநகர மன்ற தீா்மானம் எண் 126 நாள் 19.07.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.82 வின்சென்ட் ரோடு நடை பாதை கடைகள் (31 கடைகள்) - ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு - அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் - தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை எண். 147 ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள். 30.12.2000.
2. அரசாணை எண். 92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007.
3. மாமன்ற தீர்மான எண்.265 நாள். 20.11.2017
4. இவ்வலுவலக கடித எண். 892/2019/அ7 (ம) நாள்.05.03.2019.

*********

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்ட வணிக வளாக கடைகளுக்கு பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணைகளின்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீட்டித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.164 நாள் 28.10.2004-ன் படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92–நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.07–ன் படி உரிமம் புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யவும் 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசாணையின் படி பொதுப்பணித்துறை வாடகை மதீப்பிடுகளின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை3-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின் படி கீழ் குறிப்பிட்ட கடைகளுக்கு 31.03.2019-யுடன் மூன்றாண்டுகள் முடிவடைந்தததால் 01.04.2019 முதல் 31.03.2022 வரை 15 சதவீதம் வாடகை உயர்வு செய்யப்பட வேண்டும் .

| வ. எண் | வரி விதிப்பு எண் | கடை எண் | பெயர் | கடையின் அளவு | மொத்த ச.அடி | பொதுப்பணித்துறை வாடகை மதிப்பீட்டின் படி உயர்வு செய்யப்பட்டு தற்போது செலுத்தி வரும் மாத வாடகை ரூ. | உரிமம் புதிப்பிக்கப்பட வேண்டி நாள். | | 01.04.2019 முதல் 15 சதவீதம் உயர்வு செய்யப்பட வேண்டிய மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | முதல் | முடிய | |
| 1 | 8231242 | 1 | நிசாருதீன் | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 2 | 8231243 | 2 | .இஸ்மாயில் | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 3 | 8231244 | 3 | அப்துல் மஜீத் | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 4 | 8231245 | 4 | இம்தாத் அலி | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 5 | 8231246 | 5 | நிசாருதீன் | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 6 | 8231247 | 6 | அப்துல் ரஹ்மான் | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 7 | 8231248 | 7 | அப்துல் ஜலீல் | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 8 | 8231249 | 8 | முகமது இப்ராஹீம் | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 9 | 8231250 | 9 | முருகேஷ் | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 10 | 8231251 | 10 | ஜாகீர் உசேன் | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 11 | 8231252 | 11 | அலாவுதீன் | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 12 | 8231253 | 12 | ஷாஜஹான் | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 13 | 8231254 | 13 | அப்துல் ரஹ்மான் | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 14 | 8231255 | 14 | ஜியாவுதின் | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 15 | 8231256 | 15 | உபைதுரஹ்மான் | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 16 | 8231257 | 16 | அப்துல் மஜீத் | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 17 | 8231258 | 17 | அஸ்ரப் அலி | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 18 | 8231259 | 18 | லத்திப் ரஹ்மான் | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 19 | 8231260 | 19 | முகமது நாசர் | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 20 | 8231261 | 20 | ஜாகீர் உசேன் | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 21 | 8231262 | 21 | சீராஜீதின் | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 22 | 8231263 | 22 | சாகுல் | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 23 | 8231264 | 23 | ஷாஜஹான் | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 24 | 8231265 | 24 | அப்பாஸ் | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 25 | 8231266 | 25 | பாதுஷா | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 26 | 8231267 | 26 | அக்பர் அலி | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 27 | 8231268 | 27 | முகமது ரஷாக் | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 28 | 8231269 | 28 | அகமது கபீர் | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 29 | 8231270 | 29 | ஜாபர் சாதிக் | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 30 | 8231271 | 30 | இஸ்மாயில் | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |
| 31 | 8231272 | 31 | நவ்சத் அலி | 7 x 8.75 | 62 | 3423 | 01.04.2019 | 31.03.2022 | 3937 |

அரசாணை (நிலை எண்.92) நாள்.3.07.2007 பத்தி எண்.IV-ன்படி உரிமம் ஒதுக்கீடு பெற்ற குத்தகைதாரர்கள் ஒவ்வொரு 3 ஆண்டு முடிவுற்ற பின்னர் உரிமம் புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி உரிமம் புதுப்பித்துக் கொள்ள பார்வை 4-ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின் மூலம் மேற்குறிப்பிட்ட கடைகளுக்கு நிலுவைத் தொகை மற்றும் புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி சம்மதக் கடிதம் வழங்க தெரிவிக்கப்பட்டதில், மேற்படி கடை உரிமதாரர்களிடமிருந்து நாளது தேதிவரை சம்மதக் கடிதம் எதுவும் பெறப்படவில்லை.

மேற்படி உரிமதாரர்கள் செலுத்தியுள்ள முன் வைப்பு வாடகை தொகையினை உயர்வு செய்யப்படும் வாடகையின் 1 வருட வாடகைத் தொகையினை / வித்தியாச வாடகையினை வசூல் செய்யவும், இத்துடன் புதுப்பித்தல் கட்டணம், வைப்பு தொகை வித்தியாச தொகை, சேவை வரி, மின் கட்டணம் மற்றும் அவ்வப்பொழுது மத்திய மாநில அரசால் நிர்ணயம் செய்யப்படும் இதர வரிகளை செலுத்துவதற்கு ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் உரிமம் புதுப்பித்து ஒப்படைக்கவும், உரிமம் புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி உரிமம் புதுப்பிக்காத நேர்விலும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்து செய்து மறு ஏலத்திற்கு கொண்டு வரவும் அவர்களின் வைப்புத் தொகைகளை பறிமுதல் செய்து உரிமம் ரத்துசெய்து, கறுப்புபட்டியலில் சேர்த்து இவ்வினங்களுக்கு மறு ஏலத்திற்கு கொண்டுவரவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - மூன்றாண்டுகள் முடிவடைந்ததால் அரசாணைபடி 15சதவீதம் வாடகை உயர்வு செய்ய அனுமதிக்கலாம்.

ந.க. எண். 892/2019 /அ7 (ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 127 நாள் 19.07.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 13**

கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் – வார்டு எண் 31 உட்பட்ட பகுதியில் கீழ்கண்ட பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | **6261/2019/எம்.டி.2** | வார்டு எண் 31 உட்பட்ட சமுதாய கூடத்திற்கு கூடுதலான முன்னேற்றம் பணி | **28.30** |

மேற்கண்ட பட்டியலில் உள்ள பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தாள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.**6261/2019/எம்.டி.2**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 128 நாள் 19.07.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

கோயம்புத்தூர் மாநகராட்சியினை சுற்றியுள்ள பகுதிகளில் தொழிற்சாலைகள் மற்றும் வணிக வளாகங்கள் அதிகமாக உள்ளதாலும் பொது மக்கள் அன்றாடம் **3.00** இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் இம்மாநகராட்சி பகுதிக்கு வந்து செல்கின்றனர். தற்போது காந்திபுரம், உக்கடம், மேட்டுப்பாளையம் சாலை, சிங்கநல்லூர் ஆகிய இடங்களில் பேருந்து நிலையங்கள் பயன்பாட்டில் உள்ளன. இருப்பினும் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, வெள்ளலூர் பகுதியில் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் **61.62** ஏக்கர் பரப்பளவில், ரூ.**178.25** கோடி மதிப்பீட்டில் அமைக்க உத்தேசிக்கப்பட்டு, திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

இத்திட்டத்திற்கு தேவையான நிதி ஆதாரம், அரசு மானியம் மற்றும் உள்கட்டமைப்பு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெற்று வெள்ளலூர் பகுதியில் ரூ.**178.25** கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்க, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் மூலம் அரசின் நிர்வாக அனுமதி வேண்டி, பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.**2180/2015**/எம்டி.**4**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 129 நாள் 19.07.2019</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 15

**பொருள் :** வடக்கு மண்டலம் - கோயம்புத்தூர் மாநகராட்சி - வார்டு எண் 41க்கு உட்பட்ட காந்தி மாநகர் பேருந்து நிலையம் அருகில் தமிழ்நாடு தேயிலை தோட்ட கழக நிறுவன விற்பனை அங்காடி நிறுவ வாடகை அடிப்படையில் இடம் ஒதுக்கீடு செய்து தர கோருதல் – தொடர்பாக

**பார்வை :**
1. தமிழ்நாடு தேயிலை தோட்ட கழக நிர்வாக இயக்குநர் அவர்களின் 21.12.2018 ம் தேதிய கடிதம்
2. உதவி நிர்வாக பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள் 15.02.2019

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 41ல் காந்தி மாநகர் பேருந்து நிலையம் அருகில் தமிழ்நாடு தேயிலை தோட்ட கழக விற்பனை அங்காடி அமைக்க பார்வை 1 ல் கண்ட கடிதத்தில் கோரப்பட்டிருந்து.

இதன் அடிப்படையில் மேற்படி இடைத்தை ஆய்வு செய்து காந்தி மாநகர் பேருந்து நிலையம் அருகில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய சிறப்பு கோட்டம் எதிரில் 8 X 8 என்ற அளவில் உள்ள இடத்திற்கு சதுரக்கு ரூ.75/- வீதம் 64 சதுரடிக்கு மாத வாடகையாக ரூ.4800/- நிர்ணயம் செய்து உதவி நிர்வாக பொறியாளர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

எனவே மேற்படி தமிழ்நாடு தேயிலை தோட்ட கழகத்திற்கு மாத வாடகை ரூ.4800/- அடிப்படையில் நிர்ணயம் செய்து இடம் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி மாமன்ற பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1780/2012/அ1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 130 நாள் 19.07.2019</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 16

**பொருள்:** நிலபரிவர்த்தனை – கோயம்புத்தூர் மாநகராட்சி – மதுக்கரை கிராமம், க.ச.எண்.1044/6, 1143/1, 1143/2B, 1145 மற்றும் 1146ல் அமையும் வனத்துறைக்கு சொந்தமான நிலம் – மாநகராட்சியின் மயான பயன்பாட்டிற்கு Net Present Value–ன் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது – ஈடுசெய் நிலத்திற்கான நிலமதிப்பு தொகை மற்றும் மயான பயன்பாடு இடத்திற்கான NPR தொகை செலுத்த மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைத்தல் – சம்பந்தமாக.

**பார்வை:** மாவட்ட வன அலுவலர், கோயம்புத்தூர் மண்டலம் அவர்களின் கடிதம் Ref.No.10872/2015 D1, நாள்.26.12.2018.

*******

கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், மதுக்கரை கிராமம், க.ச.எண்.1044/6, 1143/1, 1143/2B, 1145 மற்றும் 1146 ஆகிய "அரசு தீர்வை ஏற்பட்ட தரிசு" காலைகளுக்கு கட்டுப்பட்ட 3.64.5 ஹெக்டேர் மயானப் பயன்பாட்டில் உள்ள வனத்துறைக்கு சொந்தமான இடத்தினை மயான அபிவிருத்தி பணிகளுக்காக மாநகராட்சிக்கு நிலமாற்ற உத்தேசத்தின் பேரில், பார்வையில் காண் மாவட்ட வன அலுவலர், கோயம்புத்தூர் மண்டலம் அவர்கள் மயான பயன்பாட்டிற்கான நிலத்திற்கு ஈடாக வனத்துறைக்கு வழங்கப்படவுள்ள வருவாய்த் துறை இடத்திற்கான நிலமதிப்பு தொகை ரூ.56,44,637/– மற்றும் மயான பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்திற்கான Net Present Value தொகை ரூ.22,78,640/– ஆக மொத்தம் ரூ.79,23,277/–ஐ வனத்துறைக்கு உரிய வங்கி கணக்கில் வரைவோலை மூலம் செலுத்துமாறும், மத்திய அரசின் நிபந்தனைகளை அமல்படுத்தியதற்கான அறிக்கையினை இரண்டாம் நிலை ஒப்புதல் பெற அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மத்திய அரசின் சுற்றுசூழல், காடுகள் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம் அவர்களின் நிபந்தனைகளின்படி தற்போது மயான அபிவிருத்திக்கான இடத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆகவே, மாவட்ட வன அலுவலர், கோயம்புத்தூர் மண்டலம் அவர்களின் கடிதத்தில் கேட்டுக்கொண்டதன்படி, மயான பயன்பாட்டிற்கான நிலத்திற்கு ஈடாக வனத்துறைக்கு வழங்கப்படவுள்ள வருவாய்த் துறை இடத்திற்கான நிலமதிப்பு தொகை ரூ.56,44,637/– மற்றும் மயான பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்திற்கான Net Present Value தொகை ரூ.22,78,640/– ஆகமொத்தம் ரூ.79,23,277/–ஐ வனத்துறைக்கு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.11324/2015/ எம்.எச்.5.

**மாநகர மன்ற தீர்மானம் எண் 131 நாள் 19.07.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 17

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணியினை ஏற்க பரிந்துரை செய்துள்ளது

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகைரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.15 க்கு உட்பட்ட ராம்ஸ் நகர் பகுதியில் பூங்கா அமைத்தல் ந.க.எண்.1395/2018/எம்டி2 | **49.00** | முன் அனுமதி நாள். 26.12.18 | **25.02.2019 முதலாம் அழைப்பு** | 1. தி/ள். கன்ஸ்ட்ரானிக்ஸ் இந்தியா 1.01 % குறைவு<br>2. திருமதி.சி.யு.மணி 0.04 % குறைவு | தி/ள். கன்ஸ்ட்ரானிக்ஸ் இந்தியா 1.01 % குறைவு |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணியின் அவசர அவசியம் கருதி நிர்வாக அனுமதிக்கு தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்கள் வழங்கிய முன்அனுமதிக்கு பின்னேற்பும் மற்றும் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் **ந.க.எண்.1395/**2018/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 132 நாள் 19.07.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 18**

**பொருள்** ஓய்வூதியம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது கணக்குப் பிரிவு – ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் – அமல்படுத்துவது – சம்பந்தமாக.

**பார்வை**
1. அரசாணை (நிலை) எண்120. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.ப.3) துறை நாள்.20.05.1999.
2. ஆணையாளர் அவர்களது குறிப்பு உத்திரவு நாள்.19.10.2016.
3. அரசாணை (நிலை) எண்.222 நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்.30.06.2018.
4. அரசாணை (நிலை) எண். நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.ப.3) துறை நாள்.28.05.2019.
5. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது கடிதம் ந.க.எண்.18971 – 1 /2016/எல் ஏ 2 நாள்.07.06.2019.

-----------------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களுக்கு பார்வை 1ல் கண்டுள்ள அரசாணை மற்றும் பார்வை 2ல் காணும் ஆணையர் அவர்களது உத்திரவின்படி மருத்துவ உதவி திட்டம் மற்றும் குடும்ப பாதுகாப்பு திட்டம் ஆகியவை நவம்பர் 2016 முதல் இம்மாநகராட்சியில் அமல்படுத்தப்பட்டு மருத்துவ உதவி திட்டத்திற்கு ஓய்வூதியதாரர்களிடமிருந்து ரூ.150/– மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களிடமிருந்து (விருப்பத்தின் அடிப்படையில் மட்டும்) ரூ.100/–ம், குடும்ப பாதுகாப்பு திட்டத்திற்கு ரூ.80/– ம் பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது. இதில் மருத்துவ உதவி திட்டத்திற்கு பதிலாக பார்வை 2ல் கண்டுள்ள அரசாணையில் ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கை துணை உட்பட) / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 01.07.2018 முதல் நகராட்சி மற்றும் மாநகராட்சியில் அமல்படுத்தி செயல்படுத்துமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 4ல் கண்டுள்ள அரசாணையில் மாநகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ காப்பீட்டு திட்டத்தினை மாநகராட்சின் ஆணையர்களே யுனைடெடு இந்தியா இன்சூரன்ஸ் காப்பீட்டு நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து கொண்டு மாநில நிதிக்குழு மானியத்திலிருந்து காப்பீட்டு தொகையினைசெலுத்தவும் அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 3 மற்றம் 4ல் கண்டுள்ள அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை ஏற்று காப்பீட்டு நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கை துணை உட்பட) / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தினை 01.08.2019 முதல் இம்மாநகராட்சியில் அமல்படுத்தலாம்.

பார்வை 3ல் கண்டுள்ள அரசாணையில் தெரிவித்துள்ளவாறு ஓராண்டுக்கான சந்தா தொகையினை 01.08.2019 முதல் 31.07.2020 வரை காப்பீட்டு நிறுவனத்திற்கு முன்கூட்டியே செலுத்தவும் ஓய்வூதியதாரர் நபர் ஒருவருக்கு ரூ.3800 + ஜி.எஸ்.டி யுடன் தற்போது (ஜுன் 2019) உள்ள 2272 ஓய்வூதியதாரர்களுக்கு (2272X3800 = 8633600 X (18% ஜி.எஸ்.டி) 1554048) = ரூ.1,01,87,648/– ஆகும். இதில் 5% பிடித்தம் செய்து விட்டு 95% காப்பீட்டு நிறுவனத்திற்கு வழங்கலாம், மீதம் உள்ள 5% தொகையினை ஆண்டிறுதியில் அந்த ஆண்டில் இறந்த ஓய்வூதியதாரர்களுக்கு மிகையாக வழங்கப்பட்ட தொகை மற்றும் புதிதாக சேர்க்கப்பட்ட ஓய்வூதியதாரர்கள் கணக்குகள் சரிபார்க்கப்பட்ட பின்பு அடுத்த ஆண்டு சந்தா தொகை செலுத்தும் பொழுது வழங்கலாம்.

பார்வை 3ல் கண்டுள்ளஅரசாணையில் தெரிவித்துள்ளவாறு ஓய்வூதியதாரர் நபர் ஒருவருக்கு ரூ.350/– வீதம் GST யுடன் ஓய்வூதியத்தில் மருத்துவ காப்பீட்டு திட்டத்திற்காக சந்தா தொகை பிடித்தம் செய்யவும் அதில் மிகையாக வரும் வித்தியாச GST தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் அனுமதி அளிக்கலாம். ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களிடமிருந்து மாதமாதம் பிடித்தம் செய்யலாம்.

மருத்துவ காப்பீட்டு தொகையினை தனியாக வங்கி கணக்கு ஏற்படுத்தி பராமரித்து அடுத்த ஆண்டுக்காக சந்தா தொகையினை காப்பீட்டு நிறுவனத்திற்கு வழங்கலாம்.

எனவே பார்வை 3 மற்றும் 4ல் கண்டுள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை ஏற்று 01.08.2019 முதல் ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தினை இம்மாநகராசியில் அமல்படுத்தவும் ஓராண்டிற்கான சந்தா தொகையினை யுனைடெடு இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு முன்கூட்டியே செலுத்த அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :அனுமதிக்கலாம் ந.க.எண்.7751/2018/பி1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 133 நாள் 19.07.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 19

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - வருவாய்ப் பிரிவு - கூடுதலாக கையடக்க செயலாக்கிகள் (Hand held devices) மூலம் வசூல் பணிகள் மேற்கொள்வது - மாநகராட்சி மென்பொருளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்துவது - மாமன்ற ஒப்புதல் வேண்டுவது - தொடர்பாக.

--------------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் வசூலிக்கப்படுகின்ற சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, காலியிடவரி, ஆப்டிக் பைபர் கேபிள் கட்டணம், தொழில் உரிம கட்டணம், வணிக வளாக வாடகை, பாதாள சாக்கடை கட்டணம் போன்ற வசூல் இனங்களை தற்போது உரிய வரிதாரர்களால் நேரடியாக சென்று மாநகராட்சி வரிவசூல் மையங்களிலும் மற்றும் மாநகராட்சி இணையதள வாயிலாகவும் செலுத்தப்பட்டு வருகின்றன. தற்போது நடைமுறையில் மேற்கொள்ளப்படும் இம்முறைகளுடன் கூடுதலாக கையடக்க செயலாக்கிகள் (Hand held devices) மூலமும் மாநகராட்சியின் மென்பொருளுடன் ஒருங்கிணைத்து வசூல் பணிகள் மேற்கொள்ளப்படும் நேர்வில் வரிவசூல் பணிகளில் இம்மாநகராட்சிக்கு கீழ்க்கண்ட நிர்வாக ரீதியான பலன்கள் ஏற்படுவதாக உள்ளன.

கோயம்புத்தூர் மாநகராட்சிப்பகுதியானது 2011-12ம் நிதியாண்டில் இணைக்கப்பட்ட 11 உள்ளாட்சி அமைப்புகளையும் சேர்த்து மொத்தம் 257.04 சதுரகீ.மீ. பரப்பளவாக உள்ளது. வளர்ந்து வரும் பெருநகர் வரிசையில் சென்னைக்கு அடுத்தபடி, கோயம்புத்தூர் மாநகராட்சியானது 5 மண்டலங்கள் மற்றும் 100 வார்டுகளை உள்ளடங்கியதாகவுள்ளது. தற்போதைய நிலையில் 100 வார்டுகளுக்கும் சேர்த்து சுமார் 54 வரிவசூலர்கள் மூலம் மட்டுமே வரிவிதிப்பு, வரிவசூல் மற்றும் மாநகராட்சியின் வருவாய் தொடர்பான அனைத்து பணிகளையும் மேற்கொள்ளப்பட வேண்டிய சூழ்நிலையிலுள்ளது. மேலும், இவ்வரிவசூலர்களை அவ்வப்போது அறிவிக்கப்படும் அரசு நலதிட்டங்கள் தொடர்பான பணிகள் மற்றும் தேர்தல், மக்கள் தொகை கணக்கெடுப்பு போன்ற பணிகளுக்கும் ஈடுப்படுத்தப்படுவதன் காரணமாக மாநகராட்சியின் வரிவசூல் பணிகள் பாதிப்படைய காரணமாகவும், போதிய வசூல் இலக்குகளை அடைய இயலாத நிலையிலுமுள்ளன.

இந்நிலையில், கடந்த 08.07.2019 அன்று இம்மாநகராட்சியிலுள்ள 5,10,650 சொத்துவரிவிதிப்புகளுக்கும் சொத்துவரி பொதுச்சீராய்வு நடைமுறைப்படுத்தப்பட்டதில், மாநகராட்சியின் வருடாந்திர மொத்த சொத்துவரி கேட்பு (நிலுவை மற்றும் நடப்பு கேட்பு உட்பட) ரூ.185.94 கோடிகளிலிருந்து ரூ.408.12 கோடிகளாக உயர்வாகியுள்ளது.

தற்போதைய நடைமுறையிலுள்ள வரிவசூல் முறைகளின் மூலம் மட்டுமே வசூல் பணிகள் மேற்கொள்ளப்படும் நேர்வில், மாநகராட்சியில் மேற்கொள்ளப்படும் குடிநீர் வசதி, சாலை வசதி, தெருவிளக்கு வசதிகள் போன்ற வளர்ச்சி பணிகளுக்குரிய பட்டியல் தொகைகளையும், மேலும் இம்மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு ஓய்வூதிய பலன்கள் மற்றும் குடும்ப ஓய்வூதிய பலன்கள் போன்ற தொகைகளையும், உரிய காலகெடுவிற்குள் காலதாமதமின்றி வழங்க இயலாத சூழ்நிலையுள்ளது.

ஆகையால் தற்போது நடைமுறையிலுள்ள வரிவசூல் முறைகளுடன் கூடுதலாக கையடக்க செயலாக்கிகள் (Hand held Devices) வாயிலாகவும் வரிவசூல் பணிகள் மேற்கொள்ளப்படும் நேர்வில், வரிவசூலர்களால், வீடு தேடிச்சென்று வரிவசூல் பணிகள் மேற்கொள்ளப்படுவதால், வரிவசூல் தொகைகள் துரிதமாகவும், உரிய காலகெடுவிற்குள் வசூல் செய்வதுடன் உரிய ரசீதுகளை உடனுக்குடன் வழங்கப்படுவதால், பொதுமக்கள் வரித்தொகைகளை எளிய முறையில் செலுத்துவதுடன் பொதுமக்கள் மத்தியில் இம்மாநகராட்சிக்கு நல்ல வரவேற்பும் கிடைக்க வாய்ப்புள்ளது.

எனவே, நடப்பு நிதியாண்டின் வரிவசூல் இலக்கினை எளிதாக அடைய ஏதுவாக போதுமான எண்ணிக்கைகள் கொண்ட கையடக்க செயலாக்கிகள் (Hand Held Devices) மூலமும் மாநகராட்சியின் 100 வார்டுகளிலும் வரிவசூல் பணிகளை இம்மாநகராட்சி மென்பொருளுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலுக்காகச் பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒப்பதல் அளிக்கலாம். ந.க.எண்.3457/2019/எம்.ஏ.1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 134 நாள் 19.07.2019</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 20

கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் மற்றும் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளால் சேதம் அடைந்த சாலைகளை சீரமைப்பு செய்வதற்காக தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) (2019-20) -ன் கீழ் ரூ. **3000.00** இலட்சத்திற்கு கீழ்கண்ட பட்டியலில் உள்ளவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

| **கிழக்கு மண்டலம்** | | | | |
|---|---|---|---|---|
| **வரிசை எண்** | **சிப்பம் எண்** | **பணியின் பெயர்** | **நீளம் (கி.மீ)** | **மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)** |
| 1 | சிப்பம் 1 | வார்டு எண் 58 மற்றும் 59 -க்குட்பட்ட தாமோதர சாமி லே அவுட், விஜயலட்சுமி நகர், குட்டி நாய்க்கர் லே அவுட், கருப்பண்ண கவுண்டர் வீதி, கங்கா நகர்,மகாலட்சுமி நகர், கருணாநிதி நகர், மகாத்மா காந்தி சாலை விரிவாக்கம், கண்ணபிரான் நகர், மூகாம்பிகை நகர் அருகில் சி.டி.சி காலனி பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல். | 6.45 | 208.00 |
| 2 | சிப்பம் 2 | வார்டு எண் 36-க்குட்பட்ட சசி அவென்யூ மற்றும் வார்டு எண் 32-க்குட்பட்ட தி நகர், குழந்தைவேல் நகர், இன்கம்டெக்ஸ் காலனி மற்றும் விஸ்வாசபுரம் ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைத்தல். | 3.45 | 197.00 |
| **மொத்தம்** | | | **9.90** | **405.00** |

| **மேற்கு மண்டலம்** | | | | |
|---|---|---|---|---|
| **வரிசை எண்** | **சிப்பம் எண்** | **பணியின் பெயர்** | **நீளம் (கி.மீ)** | **மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)** |
| 3 | சிப்பம் 3 | வார்டு எண் 6-க்குட்பட்ட இந்திரா நகர், சரவணா நகர் பின்புறம், சபரி கார்டன், எஸ்.பி நகர் 2-வது சாலை மற்றும் வார்டு எண் 7-க்குட்பட்ட கோல்டன் நகர், ஜெ.ஜெ நகர், ஸ்ரீ நகர், அன்பு நகர் மற்றும் பாரதி நகர் ஆகிய பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல் | 3.32 | 186.00 |
| 4 | சிப்பம் 4 | வார்டு எண் 9-க்குட்பட்ட பிரபு நகர், எம்.ஜி.ஆர் நகர், டிரைவர்ஸ் காலனி, வார்டு எண் 12-க்குட்பட்ட கிருஷ்ணம்மாள் வீதி மற்றும் கணபதி லே – அவுட் மற்றும் வார்டு எண் 13-க்குட்பட்ட ஆர்.கே லே-அவுட், ராமசாமி நாயுடு லே –அவுட், பி.கே. ரங்கநாதபுரம் மற்றும் வசந்தம் நகர் ஆகிய பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல் | 3.42 | 269.00 |
| 5 | சிப்பம் 5 | வார்டு எண் 16-க்குட்பட்ட நியூ தில்லை நகர் பிரதான சாலை முதல் மடத்தூர் இணைப்பு சாலைகளில் தார்சாலை அமைத்தல் வார்டு எண் 20-க்குட்பட்ட நேதாஜி பிரதான மற்றும் குறுக்கு சாலைகளில் தார்சாலை புதுப்பித்தல் மற்றும் வார்டு எண் 21-க்குட்பட்ட சௌடேஸ்வரி நகர் ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைத்தல் | 2.43 | 210.00 |
| **மொத்தம்** | | | **9.17** | **665.00** |
| **வடக்கு மண்டலம்** | | | | |

| வரிசை எண் | சிப்பம் எண் | பணியின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 6 | சிப்பம் 6 | வார்டு எண்.41 க்குட்பட்ட பாரதி நகர் பிரதான சாலை, காந்தி மாநகர் பிரதான சாலை, கே.ஆர்.ஜி நகர் குறுக்கு சாலை மற்றும் பிரதான சாலை ஆகிய பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல் | 3.95 | 215.00 |
| 7 | சிப்பம் 7 | வார்டு எண்.44 க்குட்பட்ட புதுத்தோட்டம் 2 வது வீதி, மருதம் நகர், அன்னையப்பன் 5வது வீதி, அமிர்தா அவென்யூ பேஸ் II, சங்கனுார் லட்சுமி நகர் மற்றும் பாலாஜி நகர் 3வது வீதி, வார்டு எண்.38 க்குட்பட்ட நீம் லேண்ட் 1 வது வீதி, செங்காளியப்பன் நகர் அருகில் இரயில்வே பாதை மற்றும் பயணீர் மில் சாலை, வார்டு எண்.39 க்குட்பட்ட பி.ஆர்.பி கார்டன் பார்க் சாலை, ஜெகநாதபுரம் பிரதான சாலை, குலாலர் வீதி மற்றும் டிஸ்பேன்சரி சாலை, வார்டு எண்.40 க்குட்பட்ட இளங்கோ நகர் சாலைகள், தெற்கு வீதி, எக்ஸ் சர்வீஸ் மென் காலனி மற்றும் ஜி.டி காலனி ஆகிய பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல் | 3.77 | 198.00 |
| 8 | சிப்பம் 8 | வார்டு எண்.40 க்குட்பட்ட கே.காமராஜர் நகர், பட்டாளம்மன் கோவில் வீதி முதல் கோரத் தோட்டம் சாலை, வி.ஜி ராவ் நகர் பேஸ் II பிரதான சாலை முதல் கட்டபொம்மன் வீதி மற்றும் முருகன் நகர், வார்டு எண்.43 க்குட்பட்ட ரங்கா மெஜஸ்டிக் அவென்யூ மற்றும் அதிஷ்டலட்சுமி கார்டன் ஆகிய பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல் | 3.00 | 189.00 |
| 9 | சிப்பம் 9 | வார்டு எண்.27 க்குட்பட்ட அஜ்சுகம் நகர் சாலை, வார்டு எண். 41 க்குட்பட்ட வெங்கடேசபுரம் குறுக்கு சாலைகள், அத்திபாளையம் குறுக்கு சாலை, அருணாச்சலம் கார்டன் மற்றும் சி.எம் நகர் குறுக்கு சாலை, வார்டு எண்.42 க்குட்பட்ட எம்.ஆர் நகர், மினி பேருந்து சாலை, ஸ்கூல் வீதி ஆகிய பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல் | 2.87 | 202.00 |
| **மொத்தம்** | | | **14.12** | **804.00** |

| தெற்கு மண்டலம் | | | | |
|---|---|---|---|---|
| வரிசை எண் | சிப்பம் எண் | பணியின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
| 10 | சிப்பம் 10 | வார்டு எண். 85 க்குட்பட்ட சாவித்திரி நகர், அசோக் நகர், பாலாஜி அவென்யூ, கோவிந்தசாமி லே-அவுட், அபிராமி நகர், பிரபு நகர் மற்றும் சுப்பையா லே-அவுட் ஆகிய பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல் | 2.60 | 225.00 |
| **மொத்தம்** | | | **2.60** | **225.00** |

| மத்தியம் மண்டலம் | | | | |
|---|---|---|---|---|
| **வரிசை எண்** | **சிப்பம் எண்** | **பணியின் பெயர்** | **நீளம் (கி.மீ)** | **மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)** |
| 11 | சிப்பம் 11 | வார்டு எண். 25 க்குட்பட்ட லிங்கப்ப செட்டி பிரதான சாலை மற்றும் தெப்பக்குளம் வீதி எண். 1, 2,3 வார்டு எண். 52 க்குட்பட்ட ராஜு நாயுடு லே அவுட் 1 மற்றும் 2, உப்பர் 1 வது மற்றும் 2 வது வீதி, 100 அடி சாலை 3 வது வீதி விரிவாக்கம், இளங்கோ நகர் 1 மற்றும் 2, அன்னபூர்ணா லே அவுட், ஆர்.வி.என் லே அவுட் மற்றும் அம்பிகா லே அவுட் ஆகிய பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல் | 2.65 | 171.00 |
| 12 | சிப்பம் 12 | வார்டு எண். 70 க்குட்பட்ட கருப்பராயன் கோவில் சாலை மற்றும் அம்மன்குளம் பிரதான சாலை, வார்டு எண். 80 க்குட்பட்ட எம்.என்.ஜி வீதி, சுக்கரவார்பேட்டை சாலை (டி.பி சாலை முதல் தெலுங்கு வீதி) ஆகிய பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல் | 1.60 | 144.00 |
| 13 | சிப்பம் 13 | வார்டு எண். 72 க்குட்பட்ட மாரியப்ப கோனார் வீதி, ரங்ககோனார் வீதி முதல் காளிஸ்வரா மில்ஸ் சந்திப்பு இரயில்வே பாலம், செல்லப்ப கவுண்டர் வீதி, ஆர்.ஆர் சாமி மைதானம் மற்றும் லேன், காளிஸ்வரா நகர் 1 மற்றும் 2, வார்டு எண்.74 க்குட்பட்ட ஜி.எம் நகர் பிரதான சாலை மற்றும் காந்தி நகர் ஆகிய பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல் | 2.30 | 159.00 |
| 14 | சிப்பம் 14 | வார்டு எண். 82 க்குட்பட்ட ஈஸ்வரன் கோவில் வீதி மற்றும் பெருமாள் கோவில் வீதி, வார்டு எண்.51 க்குட்பட்ட வி.என். தோட்டம் பின்புறம், நேரு வீதி, காந்திபுரம் 6 வது வீதி, எஸ்.என்.வி லே அவுட் மற்றும் எஸ்.என். தாஸ் லே அவுட் ஆகிய பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல் | 2.34 | 150.00 |
| 15 | சிப்பம் 15 | வார்டு எண்.45 க்குட்பட்ட பாலாஜி லே அவுட், நாராயண கவுண்டர் நகர், எம்.ஜி.ஆர் நகர், மற்றும் கிழக்கு தில்லை நகர் வார்டு எண்.48 க்குட்பட்ட செல்லப்ப கவுண்டர் லே அவுட் ஆகிய பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல் | 3.03 | 166.90 |
| 16 | சிப்பம் 16 | வார்டு எண்.48 க்குட்பட்ட ஜி.வி. இராமசாமி வீதி மற்றும் முத்துக்குமார் 5 வது வீதி, வார்டு எண்.49 க்குட்பட்ட சம்பத் வீதி, பக்தவட்சலம் வீதி, குட்டியப்பன் வீதி மற்றும் வேலுசாமி வீதி ஆகிய பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல் | 2.19 | 110.10 |
| **மொத்தம்** | | | **14.11** | **901.00** |

மேற்கண்ட பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகளை சீரமைப்பு செய்வதற்காக தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) (2019-20) -ன் கீழ் மதிப்பீடு ரூ.3000.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு கருத்துரு அனுப்பி வைப்பதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 7448 /2019/எம்டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 135 நாள் 19.07.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 21**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – பொறியியல் பிரிவு – உள்ளூர் திட்டக்குழும பகுதிகளில் உட்கட்டமைப்பு வளர்ச்சி, போக்குவரத்து நெரிசல்கள் குறித்து தீர்வு மற்றும் நிலஉபயோகம் குறித்து விரிவான இயக்க திட்டம் (Comprehensive Mobility Plan) தயாரித்தல் – இறுதி அறிக்கை கூட்ட நடவடிக்கைக்கு மாமன்ற அனுமதி மற்றும் அரசுக்கு கருத்துரு அனுப்ப அனுமதி வேண்டுவது – தொடர்பாக.

கோயம்புத்தூர் உள்ளூர் திட்ட குழுமப் பகுதிகளில் எதிர்காலத்தில் உட்கட்டமைப்பு வளர்ச்சி, போக்குவரத்து நெரிசல்களுக்கு தீர்வு மற்றும் நில உபயோகம் குறித்து விரிவான இயக்க திட்டம் (Comprehensive Mobility Plan) போன்ற திட்டங்களை கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மாநகராட்சி, அனைத்து நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி பகுதிகளையும் சேர்த்து ஒருங்கிணைந்த மாநகர இயக்க திட்டம் (Integrated City Mobility Plan) செயல்படுத்தப்படவுள்ளது.

மேலும், கோயம்புத்தூர் மாநகர தொலை நோக்கு பார்வையில், "திட்டமிட்ட நகர அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல், சேவை தரத்தை உயர்த்துதல், அதன் அடிப்படையில் நகர மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துதல், போட்டிமிகு பொருளாதார வளர்ச்சியில் உலக நகரங்களில் முதலிடத்தை அடைவது, சுற்றுச் சூழலை பாதுகாக்கும் வகையில் நிலையான வளர்ச்சியை உருவாக்குவது" போன்ற நோக்கங்களை அடைய ஏதுவாக திட்ட செயலாக்கம் கீழ்க்கண்டவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

1. நிர்வாக ஆளுமையை மேம்படுத்துதல் மற்றும் சீர்திருத்தங்களை செயல்படுத்துதல்.
2. எதிர்கால நகர வளர்ச்சிக்கேற்ப உட்கட்டமைப்பை ஏற்படுத்துதல்.
3. பொது போக்குவரத்து மற்றும் மோட்டார் வாகனம் அல்லாத போக்குவரத்து திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்தல்.
4. நீர்நிலைகளில் நீர்தேக்கத்தினை அதிகப்படுத்தி, சுகாதாரத்தை பேணிகாக்கவும் மற்றும் பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் அவற்றினை புனரமைத்தல்.
5. திடக்கழிவு மேலாண்மையினை மேம்படுத்துதல் மற்றும் கழிவுநீரினை சுத்திகரிப்பு செய்து மறுசுழற்சி பயன்பாட்டிற்கு கொணர்தல்.
6. பொதுமக்களுக்கு 24 மணி நேரமும் சுகாதாரமான மற்றும் சீரான அழுத்தத்துடன் குடிநீர் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்துதல்.
7. செயலாக்கங்கள் சிறக்க நவீன யுக்திகள் மற்றும் தொழில்நுட்பங்களை தொடர்ந்து உட்புகுத்துதல்.
8. நகர்புற மேம்பாட்டிற்கான குறிக்கோள்களுடன் தொலை நோக்குத்திட்டம் தயாரித்தல்.
9. அடுத்த 20 ஆண்டுகளுக்கு நகர்புற வளர்ச்சிக்கான அடிப்படைத்திட்டம், நில பயன்பாடு மற்றும் போக்குவரத்து தொடர்பான திட்டங்கள் தயாரித்தல்.
10. நகர்புற போக்குவரத்திற்கான திட்டங்கள் சரியான முறையில் குறைந்த செலவில் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்தல்.
11. தற்காலத்திற்கும் மற்றும் எதிர்காலத்திற்கும் மக்களின் பாதுகாப்பான பயணத்தினை உறுதி செய்யும் வகையில் போக்குவரத்து மேலாண்மை திட்டம், மற்றும் போக்குவரத்து உட்கட்டமைப்பு அமைப்பின் தேவைகளை கண்டறிந்து அதற்கான குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்டகால திட்டங்களை தயாரித்தல்,

மேற்கண்ட செயலாக்க விரிவான இயக்க திட்டம் (Comprehensive Mobility Plan) தொடர்பாக 11.08.2015–ல் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கலந்தாலோசனைக் கூட்டத்தில் நடைபெற்ற ( இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ) கூட்ட நடவடிக்கை அறிக்கையில் கூறப்பட்டுள்ள பொருளினை செயல்படுத்த அரசுக்கு கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம். ந.க.எண்.4091/2013/எம்டி4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 136 நாள் 19.07.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 22

**பொருள்:** நிலஉரிமை மாற்றம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட சுந்தரம் வீதி, நகரளவு வார்டு G (7), பிளாக் 23, T.S.No.1183ல் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 0.5116.0 ஹெக்டேர் இடம் – இவ்விடத்தில் 50 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வரும் ஏழை எளியவர்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்தும் உத்தேசம் – தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய அனுமதி வேண்டி அரசுக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்பித்தல் – தொடர்பாக.

**பார்வை:** நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.2089A/LA/2017, நாள்.14.11.2017.

********

மாண்புமிகு தமிழக உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் நேரடி ஆய்வினைத் தொடர்ந்து, கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட சுந்தரம் வீதி பகுதியில், நகரளவு வார்டு G (7), பிளாக் 23, T.S.No.1183ல் உள்ள 0.5116 ஹெக்டேர் விஸ்தீரணம் கொண்ட ஆணையாளர், கோவை மாநகராட்சி, மேல் நிலை தண்ணீர் தொட்டி என பதிவான இடத்தில் 30 குடியிருப்புகளில் குடியிருந்து வரும் சுகாதார துப்புறவு பணியாளர்களுக்கு ‘‘பிரதம மந்திரி வீட்டுவசதி திட்டம் – அனைவருக்கும் வீடு’’ (PMAY-HFA) திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் குடியிருப்பு வீடுகள் கட்டி பயனாளிகளுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பார்வையில் காண் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய நிர்வாகப் பொறியாளர் அவர்களின் கடிதத்தில் மேற்கண்ட நிலத்தினை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்து வழங்கும் பட்சத்தில் வாரிய ஒப்புதலுடன் இத்திட்டப் பகுதிக்கு திட்ட வரைபடம் தயார் செய்யப்பட்டு, ஒவ்வொரு குடியிருப்பபையும் அடிப்படை வசதிகளுடன் கட்ட விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

எனவே, ‘‘பிரதம மந்திரி வீட்டுவசதி திட்டம் – அனைவருக்கும் வீடு’’ (PMAY-HFA) திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் குடியிருப்பு வீடுகள் கட்டி பயனாளிகளுக்கு வழங்க மாநகராட்சிக்கு சொந்தமான நகரளவு வார்டு G (7), பிளாக் 23, T.S.No.1183ல் உள்ள 0.5116 ஹெக்டேர் விஸ்தீரணம் கொண்ட நிலத்தில் 0.51 ஏக்கர் பரப்பளவு நிலத்தினை மனை ஒன்றிற்கு ரூ.10,000/– என்ற விலை விகிதத்தில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நிலஉரிமை மாற்றம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையருக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.885/2016/எம்.எச்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 137 நாள் 19.07.2019</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 23

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் சிறுவாணி, பில்லூர் – I, பில்லூர் – II, ஆழியார் மற்றும் பவானி (கவுண்டம்பாளையம்) குடிநீர் ஆதாரங்களை கொண்டு குறிப்பிட்ட அளவுகளில் தற்போது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

சிறுவாணி நீர் பிடிப்பு பகுதியில் பருவமழை உரிய காலத்தில் பெறப்படாததால் அணையின் நீர் மட்டம் வெகுவாக குறைந்து விட்டது. எனவே, மாநகராட்சி பகுதியில் சிறுவாணி திட்டப் பகுதியில் இருந்து 24 வார்டுகளுக்கு குடிநீர் வழங்கப்பட்ட நிலையில் தற்போது மேற்கு மண்டலத்தில் 7 வார்டுகளுக்கு மட்டுமே குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள மேற்கு மற்றும் மத்திய மண்டலம் 17 வார்டுகளுக்கு பில்லூர் திட்ட விநியோகப் பகுதியில் தற்சமயம் 12.00 MLD குடிநீர் ஏற்கனவே உள்ள இணைப்புகள் மூலம் 6 முதல் 8 நாட்கள் இடைவெளியில் வழங்கப்பட்டு வருகிறது.

பில்லூர் திட்டப்பகுதியில் இருந்து சிறுவாணி திட்டப் பகுதியில் உள்ள குடிநீர் குழாயுடன் இணைக்கப்பட்டுள்ள அமைப்பின் மூலம் 12.00 MLD குடிநீர் மட்டுமே பெறப்பட்டு வருகிறது. எனவே மேற்கண்ட 24 வார்டு பகுதிகளுக்கும் கூடுதலாக குடிநீர் வழங்கும் பொருட்டு டாடாபாத் குடிநீர் தொட்டியில் கூடுதலாக மின்மோட்டார் பம்புகள் பொருத்தினால் தற்போது சிறுவாணி குடிநீர் பாதிப்புள்ள வார்டுகளின் வழங்கப்படும் இடைவெளியினை குறைத்திட முடியும். மேலும், சிறுவாணி பிரதான குழாய்க்கு இணைப்பு ஏற்படுத்தும் பணிக்கு State Disaster Response Fund 2019 திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு வேண்டி மாவட்ட ஆட்சியர் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு ந.க.எண். 6467/13/ப.வ (பி) நாள். .06.2019 ஏற்கனவே கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, பில்லூர் குடிநீர் பிரதான இணைப்பிலிருந்து டாடாபாத் வழியாக சிறுவாணி பிரதான குழாய்க்கு இணைப்பு ஏற்படுத்தி 50 Hp மோட்டார் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய ரூ.50.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 6467/13/ப.வ (பி)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 138 நாள் 19.07.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 24

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி – குறிச்சி, குனியமுத்தூர் மற்றும் கிணத்துக்கடவு கூட்டுக் குடிநீர் திட்டம் - (ஆழியார் குடிநீர் திட்டம்) – தலைமையிட கட்டுமான பணிகளை ஆத்துப்பொள்ளாச்சியிலிருந்து மாற்றி குடிநீர் கட்டுமான அபிவிருத்திப் பணிகள் மாவட்ட கனிம நிறுவன நிதியுதவியின் கீழ் (DMFTF) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்துதல் – மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பு.

**பார்வை:** G.O (D) No.13/Industries (MM D-1)Dept நாள்.25.01.2019.

******

நிர்வாகப்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அவர்களது கடிதம் எண். F.KKK cwss/JDO/Siruvani/cmc/2019, 15.07.2019-ம் தேதிய கடிதத்தில், குறிச்சி, குனியமுத்தூர் மற்றும் கிணத்துகடவு கூட்டுக்குடிநீர் திட்டத்தில் ஆழியார் ஆற்றிலிருந்து குடிநீர் இழுக்கும் புள்ளியை (Drawl Point) பொள்ளாச்சி நகராட்சியில் குடிநீர் தலைமையிடத்திற்கு அருகில் மாற்றி அமைத்து ஏற்கனவே உள்ள குடிநீர் கட்டுமானங்களை பயன்படுத்தி பொதுமக்களின் குடிநீர் தேவையை திருப்திகரமாக விநியோகிக்க மாநகராட்சி நிதியில் அதற்கான குடிநீர் கட்டுமான அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது எனவும், மேலும், புதியதாக குடிநீர் தலைமையிடம் கட்டுதல், ஏற்கனவே உள்ள சிறிய கிணற்றிலிருந்து குழாய் மூலம் இணைத்தல், கடினநீர் சுத்திகரிப்பதற்கான பம்ப்செட், கடினநீர் உந்தும் பிரதான குழாய் ஆகிய பணிகளுக்கு 2018-19-ஆம் ஆண்டு விலை விபரப்பட்டியலின்படி ரூ.12.00 கோடியாகும். மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களால் ரூ.8.00 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கான நிதி மாவட்ட கனிம நிறுவன நிதியுதவின் கீழ் (DMFTF) செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மீதத்தொகை ரூ.4.00 கோடிக்கு கோயம்புத்தூர் மாநகராட்சி நிதியின் கீழ் செயல்படுத்தவும் அதற்கான ஒப்புதல் கடிதம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கான மாமன்றத் தீர்மானம் நிறைவேற்றி கொடுக்குமாறு மேற்படி கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, கோயம்புத்தூர் மாநகராட்சி கேட்டுக்கொண்டதன்படி, ஆத்துப்பொள்ளாச்சியில் உள்ள குடிநீர் தலைமையிட கட்டுமான பணிகளை ஆற்றின் உயர்ந்த பகுதியில் பொள்ளாச்சி நகராட்சியில் குடிநீர் தலைமையிடத்திற்கு அருகில் மாற்றி அமைக்கவும், பொதுமக்களுக்கு குடிநீர் திருப்திகரமாக விநியோகிக்கவும், அதற்கு ஏற்கனவே உள்ள குடிநீர் கட்டுமானங்களான குடிநீர் சுத்திகரிக்கும் தொட்டி, சுத்திகரிக்கப்பட்ட நீர் உந்து நிலையம் மற்றும் இதர கட்டுமானங்களை பயன்படுத்தி மேற்குறிப்பிட்ட அபிவிருத்தி பணிகளுக்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.4.00 கோடிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் கோயம்புத்தூர் மாநகராட்சி நிதியிலிருந்து செயல்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.11280/2011/ப.வ (பி)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 139 நாள் 19.07.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 25

கோயம்புத்தூர் மாநகராட்சியின் ஐந்து மண்டல அலுவலகங்கள், பிரதான அலுவலகம், நகரமைப்பு பிரிவு மற்றும் பொறியியல் பிரிவுகளில் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்தி பணிகளை மேற்கொள்ளுதல் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஒப்பந்த அடிப்படை முறையில் மாநகராட்சி பொறியாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர்கள் அமர்த்துதல்.<br><br>ந.க.எண். 8565/2018/எம்.டி.5 | 62.00 | முன் அனுமதி 25.07.18 | 19.12.18 முதலாம் அழைப்பு | 1). திு/ள். கன்ஸ்ட்ரானிக்ஸ் இந்தியா 6.01% அதிகம்<br><br>2). திு/ள். யுனைடெட் டேட்டா சர்வீசஸ் பி லிட் 5.18% அதிகம் | திு/ள். யுனைடெட் டேட்டா சர்வீசஸ் பி லிட் 4.97% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 2 | வெள்ளலூர் பயோகியாஸ் பிளாண்டிற்கு வருடாந்திர பாரமரிப்பு பணி செய்தல்.<br><br>ந.க.எண். 8564/2018/எம்.டி.4 | 15.00 | முன் அனுமதி 25.07.18 | 19.12.18 முதலாம் அழைப்பு | 1). திு/ள். மெட்ராஸ் இன்ப்ரா 5.93% அதிகம்<br><br>2). திு/ள். சவுபர்ணிகா அசோஸியேட்ஸ் 0.03% குறைவு | திு/ள். சவுபர்ணிகா அசோஸியேட்ஸ் 0.03% குறைவு |
| 3 | வெள்ளலூர் உரக்கிடங்கிற்கு கணிணி விபர பதிவாளர், காவலர் மற்றும் மேற்பார்வையாளர் ஆகிய பணிகளுக்கு ஆட்களை அமர்த்துதல்.<br><br>ந.க.எண். 8563/2018/எம்.டி.4 | 20.00 | முன் அனுமதி 25.07.18 | 19.12.18 முதலாம் அழைப்பு | 1). திு/ள். வர்தான் இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் 0.14% அதிகம்<br><br>2). திு/ள். யுனைடெட் டேட்டா சர்வீசஸ் பி லிட் 0.07% குறைவு | திு/ள். யுனைடெட் டேட்டா சர்வீசஸ் பி லிட் 0.07% குறைவு |
| 4 | தெற்கு மண்டலம் ஜெ.ஜெ நகர் பார்க் மற்றும் புட்டுவிக்கி பகுதியில் உள்ள நடைபயிற்சி மேற்கொள்ளும் இடத்திலுள்ள பூங்காவினை வருடாந்திர பராமரிப்பு செய்தல்.<br><br>ந.க.எண். 7934/2018/எம்.டி.4 | 12.00 | முன் அனுமதி 25.07.18 | 19.12.18 முதலாம் அழைப்பு | 1). திு/ள். மெட்ராஸ் இன்ப்ரா 0.03% குறைவு<br><br>2). திு/ள். சவுபர்ணிகா அசோஸியேட்ஸ் 0.28% **அதிகம்**<br><br>3).திு/ள்.செவ்வேல் அன் கோ **1.36% அதிகம்** | திு/ள். மெட்ராஸ் இன்ப்ரா 0.03% குறைவு |
| 5. | பிரதான அலுவலகத்தில் பொறியியற் பிரிவிற்கும், அனைத்து மண்டலங்களிலும் உள்ள நகரமைப்பு பிரிவிற்கும் ஒப்பந்த அடிப்படையில் தொழில்நுட்ப உதவியாளர்கள் மற்றும் கணிணி விபர பதிவாளர்கள் அமர்த்துதல்.<br>ந.க.எண். 8566/2018/எம்.டி.5 | 55.00 | முன் அனுமதி 25.07.18 | 19.12.18 முதலாம் அழைப்பு | 1). திு/ள். கன்ஸ்ட்ரானிக்ஸ் இந்தியா 5.89% அதிகம்<br><br>2). திு/ள். யுனைடெட் டேட்டா சர்வீசஸ் பி லிட் 5.27% அதிகம் | திு/ள். யுனைடெட் டேட்டா சர்வீசஸ் பி லிட்<br><br>4.95% குறைவு (விலை குறைப்பிற்கு பின்) |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளின் ஒப்பந்த புள்ளிகளை ஏற்கவும் மற்றும் அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்பட்ட பணிகளின் நிர்வாக அனுமதிக்கு முன்அனுமதி பெறப்பட்டதற்கு பின்னேற்பு வேண்டியும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம். ந.க.எண். 8565/2018/எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 140 நாள் 19.07.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

(ஒப்பம்) ஜெ. ஷ்ரவன்குமார், இ.ஆ.ப.,
ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,
கோயம்புத்தூர் மாநகராட்சி